**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| O.S.No. 52/2019 | Date : 21.04.2026 | PW 1 |
|---|---|---|
| Name: மல்லிகா | க/பெ.செல்வன் | |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் பெயர் சுக்லான் (எ) பெருமாள் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் கருப்பாயி என்றால் சரிதான். எனது பெரிய தாத்தா பெயர் எனக்கு தெரியாது. பாலகவுண்டருக்கு சின்னப்பன் (எ) ரங்கசாமி என்ற சகோதரர் உள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சொத்து பாலகவுண்டரின் அப்பா சொத்து என்றால் சரிதான். பாலகவுண்டர் மனைவி தற்போது உயிருடன் இல்லை. என் அப்பாவுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் கருப்பாயி இறந்துவிட்டார். இரண்டாவது மனைவி செல்லம்மாள் தற்போது உயிருடன் உள்ளார். இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ள 4 மற்றும் 5 வாதிகள் எனது அத்தை பாப்பாவின் மகள்கள் ஆவார்கள். பாப்பா தற்போது உயிருடன் இல்லை. அவர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. பாப்பா இறந்துவிட்டதாக வழக்கில் நான் சொல்லவில்லை. பாப்பாவின் வம்சாவளி பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பாலகவுண்டருக்கு நாங்கள்தான் வாரிசுகள் என்று வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகளை 2 வது பிரதிவாதி ரங்கநாதன் (எ) குமாருக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனது மகளுக்கு ஒரே மகன் தான் என்றால் சரிதான். எனது மகனும் எனது தம்பியும் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். அவர்கள் இருவரும் சுமார் 10 வருடங்களாக சேர்ந்து வாழாமல் உள்ளார்கள். மேற்படி பிரச்சினையின் காரணமாக எனக்கும் 2 வது பிரதிவாதிக்கும் மன வருத்தம் உள்ளது என்றால் சரிதான். வழக்கின் 2 வது வாதி அவரது கணவருடன் உள்ளார் என்றால்சரிதான். 3 வது வாதியின் கணவர் இறந்துவிட்டார் என்றாலும் அவர் கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் ஈரோட்டில் தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். அமராவதி, சுமதி இருவரில் ஒருவர் தாரமங்கலத்திலும் சுமதி பென்னாகரத்திலும் உள்ளார் என்றால் சரிதான். தாவாவில் எத்தனை சொத்தை காட்டியுள்ளேன் என்றால் பட்டா எண். 188 என்ற சொத்தை பொறுத்துதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் எத்தனை சர்வே எண் உள்ளது நான்கு உள்ளது. மேற்படி பூமியின் விஸ்தீரணம் என்னவென்றால் 95 செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். செக்குபந்தியில் யார் உள்ளார்கள் என்ற விவரம்

எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள சொத்து விவரத்தில் நான்கு எல்லைகளை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா நிலத்தில் எத்தனை போர், எத்தனை கிணறு உள்ளது என்றால் 2 போர் உள்ளது. ஒரு கிணறு உள்ளது. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியின் மகன் கதிர்வேல் வீடு கட்டியுள்ளார். மேற்படிவிவரத்தை நான் சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு போட்ட பிறகு தான் ஆள்துளை கிணறும் வீடும் கட்டினார்கள். தாவா சொத்தின் பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்றால் பொன்னம்மாள், பெருமாள், கருப்புசெட்டி, பாலன் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. நான் தாவாவில் பொய்யர்களின் பங்கு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சர்வே எண். 4/6 எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் 95 செண்ட் விஸ்தீரணம் கொண்டது. சர்வே எண். 4/6 யில் சுமார் 1 ஏக்கர் 90 செண்ட் அளவுள்ள பூமி என்றால் அது குறித்து தெரியவில்லை. என் தாத்தாவிற்கு 95 செண்ட்டும் எனது சின்ன தாத்தாவிற்கு 95 செண்ட் பூமி என்றால் சரிதான். அதில் கதிர்வேலும், செந்தில் என்பவரும் என் சின்னதாத்தாவிடம் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். வழகக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கிரயம் பெற்றுள்ளார்கள். மேற்படி பூமியில் செல்லம்மாள் 50 செண்ட் பூமி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 50 செண்ட் நிலத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அது பொதுவில் உள்ளது. 2ம் பிரதிவாதி ரங்கநாதன் என்பவர் தாவா சொத்தில் செம்மண்ணை வெட்டி விற்பனை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. செம்மண்ணை வெட்டி விற்பனை செய்கிறார் என்று 1ம் பிரதிவாதியின் மகன் கதிர்வேல் 2ம் பிரதிவாதியின் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. செல்லம்மாள் கிரயம் பெற்ற 50 செண்ட் நிலத்தை பொறுத்துதான் நான் பாகம் கேட்கமுடியும் என்று சொன்னால் சரியல்ல. 1980ம் ஆண்டிலேயே பெருமாளுக்கும், கருப்புசெட்டிக்கும் அமரம் கீழ்க்காடு பழனியப்ப கவுண்டர்,ரங்கசாமி கவுண்டர், வெங்கடாஜலம், முன்னால் பஞ்சாயத்து தலைவர் துரைசாமி கவுண்டர், மாணிக்கம், மற்றும் பலர் சேர்ந்து பாகம் பிரித்து அத்து காட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல. பாகம் பிரித்த நிலத்தில் சர்வே எண். 4/6 யில் வடக்கில் பெருமாளுக்கும் அதற்கு வடபுறம் கருப்பு செட்டிக்கும் அதன் வடக்கு புறம் பெருமாளுக்கும் என்று பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த நான்கு பகுதிகளில் முதல் பகுதியில் கதிர்வேல் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கதிர்வேல்

வீடு கட்டியுள்ளார். கதிர்வேல் 2010ம் ஆண்டிலேயே வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண். 4/6யில் ரோட்டின் மேற்கே செல்லம்மாளுக்கு கிரயம் பெற்ற நிலம் 50 செண்ட் உள்ளது என்றால் சரிதான். செல்லம்மாளுக்கு விட்ட நிலத்திற்கு கிழக்கில் ரங்கநாதன் (எ) குமார் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் புறம்போக்கில் வீடு கட்டியுள்ளார். பெருமாள் பாகத்திற்கு தெற்கில் உள்ள நிலத்தில் 1993ல் கருப்பு செட்டி கிணறு வெட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பால கவுண்டர் தான் கிணறு வெட்டியுள்ளார். அந்த கிணற்றுக்கு மின் இணைப்பு உள்ளது என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் கருப்பு செட்டி பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/–மல்லிகா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.